8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதனுடைய அவசியத்தை உத்தேசித்துத்தான் தனியாக பப்ளிக் ஹெல்த் என்சினியரிங் ஸர்கிள் மதுரையில் வைக்கப்பட்டிருக்கிறது.

Mobile Court

* 239 *Q*.—SRI V. SANKARAN. Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have proposed to set up a mobile court for trying petty traffic offences in Madras City; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) & (இ) போக்குவரத்து குற்றங்களை மட்டும் விசாரணை செய்வதற்காக இயங்கும் போக்குவரத்து நீதி மன்றம் ஒன்றினை அரசாங்கம் அமைத்துள்ளது. இந்த இயங்கும் நீதிமன்றம் 18-6-1966 முதற் கொண்டு செயல்பட்டு வருகிறது. ஞாயிற்றுக் கிழமைகளும் அரசாங்க விடுமுறை நாட்களும் தவிர வாரத்தில் எல்லா நாட்களிலும் திட்ட முறைப்படிக் குறிப்பிட்ட இடங்களில் காலை 9 முதல் 11 மணி வரையிலும் மாலை 3-30 முதல் 5-30 மணி வரையிலும் இந்த நீதி மன்றம் பணியாற்றுகிறது. சென்னை, (போக்குவரத்து) போலீஸ் துணைக் கமிஷனர் தயாரித்துச் சென்னை மாநிலத் தலைமை மாஜிஸ்ட்ரேட் ஒப்புதல் அளிக்கும் வாரதிட்ட முறைப்படி இந்த நீதி மன்றம் செயல்படும். மாநிலத் தனிச் சிறப்பு மாஜிஸ்ட்ரேட் (Special Honorary Presidency Magistrate.) இந்த நீதி மன்றத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்று, தம்முன் கொண்டு வரப்படும் போக்குவரத்துக் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு தீர்ப்பு கூறுகிறுர்.

திரு. வை. சங்கரன்: இந்த ஒரு அமைப்பை மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: அந்தத் தகவல் இப்போது என்னிடமில்லை, தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

திரு. எம். எஸ். மணி: சார், சென்னையில் இந்த மொபைல் கோர்ட் எந்தெந்த இடங்களில் எந்தெந்த நேரத்தில் நிறுத்தப்படுகிறது என்பதை அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: சார், அனேகமாக சென்னையில் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு அருகாமையில் 30 இடங்களில் நிறுத்தப்படுகிறது, அதற்கான லிஸ்ட் இருக்கிறது. மற்ற விவரங்கள் இல்லை. அதாவது தண்டையார்பேட்டை, ஹார்பர், நார்த் பீச், லா காலேஜ், கிரிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி, மூர் மார்கெட், வெப்பரி, பால்ட் கொட்டர்ஸ், வியாசர்பாடி இப்படியாக 30 இடங்களில் நிறுத்தப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த நீதி விசாரணை போலீஸ் ஸ்டேஷன்களில் வைத்து நடத்துவதாக இருந்தால், சம்பந்தப்பட்ட குற்றவாளி, குற்றத்தை உண்மை என்று தான் ஒத்துக்

[8th August 1966

கொள்ளவேண்டுமே தவிர இல்லை என்று சொல்வதற்குரிய வாய்ப்பும் வசதியும் இருக்காது. ஆகவே போலீஸ் ஸ்டேஷன்களை தவிர்த்து வேறு இடங்களில் வைப்பதற்கு ஆலோசனை செய்யப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : போலீஸ் ஸ்டேஷன் என்றிருந்தாலும் சரியான முறையில் தான் விசாரிக்கப்படுகிறது.

Japanese Experts Team

* 240 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Japanese Experts Team which visited the multimineral mine site at Mamandur in South Arcot district has submitted it preliminary report; and

(b) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) கனிப் பொருள் படிவங்களின் தன்மை, அளவு ஆகியவற்றைப் பற்றி இந்தியப் புவியியல் ஆராய்ச்சி நிறுவனமும் மாநிலப் புவியியல் துறையினரும் கூறியுள்ளவற்றை ஜப்பானிய நிபுணர் குழு ஒப்புக்கொண்டுள்ளது. கனிப்பொருள் ஆய்வுப் பணியை தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அக்குழு பரிந்துரைத்துள்ளது.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ஆராய்ச்சி இலாகாவானது இதிலிருந்து என்னென்ன உலோகங்கள் கிடைக்கும், எந்த அளவுக்கு கிடைக்கும் என்று கண்டு பிடித்திருக்கிருர்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : என்னிடத்தில் இருக்கின்ற தகவல்படி காப்பர் ஓர், ஸிங்க் ஓர், லெட் ஓர் கிடைக்கின்றன. காப்பர் ஓர் 63 சத விகிதம், லெட் ஓர் 2 சத விகிதம், ஸிங்க் ஓர் 2.73 சத விகிதம் என்ற அளவில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பொருட்கள் எவ்வளவு பரப்புக்கு கிடைக்கிறது ? இதிலிருந்து மொத்தம் எத்தனை டன்கள் கிடைக்கும், அதிலிருந்து தூய்மைப் படுத்தப்பட்ட உலோகங்கள் எந்த அளவுக்கு கிடைக்கும் என்பன போன்ற மதிப்பீட்டுக் கணக்கு ஏதேனும் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அப்படியென்ருல் அதன் விவரங்கள் என்னென்ன ?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A deposit of one million tons is worth mining and considered to be in economic unit for mining. Mining can be done at the second stage at the rate of 250 tons per day. At this rate the reserve will last for ten years.

திரு. சா. கணேசன் : ஒரு நாளைக்கு இத்தனை டன் படிவம் பொருட்கள் அதாவது 'ஓர்ஸ்' கிடைக்கக்கூடும் என்ற கணக்கை தெரிவித்தார்கள். அதிலிருந்து சுத்தப்படுத்தப்பட்ட உலோகம்